**Tiaano®** *Innovation In Inert Metals*

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25**%**
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Nov. 12 : 633 Nos.
  Up to Oct. 12 : 620 Nos.
- **Performance Nov. 12 ...**
  Turnover growth : 4.53%
  Employment growth : -0.54
  100% Attendance : 9.7%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




## உறவினர்!

ஒரு காட்டில் ஆபத்து இல்லாத தனி இடத்தில் எங்கும் பசுமையான புல் நிறைந்திருந்தது. புல் மேயக்கூடிய வேறு விலங்கு அந்த வட்டாரத்தில் இல்லாததால் மான் எந்தவித தொந்தரவும் இல்லாமல் புல்லை மேய்ந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அந்த மானுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. பல நாட்கள் படுக்கையாக கிடந்தது. மான் நோயுற்று இருக்கும் செய்தியை அந்த மானுடைய உறவினர்களான மற்ற மான்கள் கேள்விப்பட்டன.

வெகுதொலைவில் வசித்து வந்த மான்கள் நோயுற்று இருக்கும் மானை காண்பதற்கு அங்கு வந்து சேர்ந்தன. சில நாட்கள் தங்கிய அந்த மான்கள் சுற்று வட்டாரத்தில் உள்ள புல்லை எல்லாம் மேய்ந்து அழித்தன. சில நாட்கள் கழித்த பிறகு உறவினர்களான மான்கள் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டன.

நோயுற்ற மான் கொஞ்சம் புல் மேயலாம் என்று வெளியே வந்து பாத்தபோது தன் உறவினர்கள் அந்த வட்டாரத்தில் இருந்த புல்லை எல்லாம் தின்று அழித்துவிட்டதை கண்டு திடுக்கிட்டது. இனி புல் வளர்ந்து செழிப்பதற்கு பல நாட்களாகும். அதுவரை பட்டினி கிடக்க வேண்டியதுதான் என்று வருத்தப்பட்டது. உறவினர்கள் இருப்பது வாழ்க்கைக்கு நல்லதுதான், ஆனால் சுயநலம் மிகுந்த உறவினர்களால் வாழ்க்கைக்கு நன்மையை விட தீமையே அதிகம் என்பதை உணர்ந்து மிகவும் வருந்தியது மான்.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## கடவுள் நமக்கு அருளியது என்ன?

வானம் எப்போதும் அழகான நீல நிறத்தில் இருக்கும் என்றோ, பூமியில் மலர்கள் தூவப்பட்ட நடைபாதைகள், நமது வாழ்க்கை முழுவதும் இருக்கும் என்றோ கடவுள் நமக்கு அருளவில்லை.

மழையே இல்லாமல் சூரிய வெளிச்சம் இருக்கும் என்றோ, துன்பமே இல்லாமல் மகிழ்ச்சியும், வலியே இல்லாமல் அமைதியும், திருப்தியும் தொடர்ந்து இருக்கும் என்று கடவுள் நமக்கு அருளவில்லை.

ஆனால் சிறப்பாக பணிசெய்ய ஆற்றலும், கடும் உழைப்பிலிருந்து ஓய்வும், போகும் பாதையில் வெளிச்சமும், சோதனைகளின் போது மேலிருந்து உதவியும், நமக்கு துணை நிற்க தவறாது கனிவும், அனுதாபமும் அத்துடன், என்றும் குறையாத அன்பும் தருவதாக மட்டுமே நமக்கு அருளியிருக்கிறார்.

Compiled by : Mr. K. Manivannan
Fibtec

## FUNCTIONAL WISHES




**New Year**
**1st January**



**Pongal**
**14th January**



**Republic Day**
**26th January**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr. G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 044 - 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னைவளர்ப்பினிலே!



**Mr. G. Ravindran** — **6th Jan.**
Fib Tech

**Mr. C. Sivakumar** — **10th Jan.**
Production

**Mr. R. Manikandan** — **14th Jan.**
Coating

**Mr. P. Munuswamy** — **19th Jan.**
Fib Tech

**Mrs. S. Sasi Rekha** — **19th Jan.**
Marketing

**Mr. M. Nagarajan** — **20th Jan.**
Production

**Mr. G. Murugesan** — **21st Jan.**
Store

**Mr. P. Seenivasan** — **23rd Jan.**
Administration

**Mrs. J. Vanajambika Jeyakummar** — **27th Jan.**
Director

**Mr. A. Nazir Khan** — **30th Jan.**
Administration

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

நட்சத்திர உணவகங்கள் இரண்டு எதிரெதிரே அமைந்திருந்தன. எதிரிலுள்ள உணவகத்தின் வெளித் தோற்றத்தை, தன் அறையின் கண்ணாடி வழியே கண்டு பரிகசிப்பார். இந்த உணவகத்தின் உரிமையாளர். "எவ்வளவு அழுக்கு! எவ்வளவு ஒட்டடை! எப்படித்தான் இங்கே மக்கள் வருகிறார்களோ!" என்று விமர்சித்துக் கொண்டேயிருப்பார்.

ஒருநாள் காலை, கண்ணாடி வழியே பார்த்தபோது எதிரே இருந்த உணவகம் தூய்மையாக ஒளி வீசியது. விசாரித்த போதுதான் விவரம் புரிந்தது. இந்த உரிமையாளருடைய அறையின் கண்ணாடி அன்றுதான் துடைக்கப்பட்டது என்று. அழுக்கும் ஒட்டடையும் இருந்தது, எதிர் கட்டிடத்தில் அல்ல! இவருடைய அறையின் கண்ணாடியில்!!

"பிறரைக் குற்றம் சொல்வதை நிறுத்தி முதுகைப் பாருங்கள்! முதுகினில் இருக்கு ஆயிரம் அழுக்கு அதனைக் கழுவுங்கள்" என்று கவியரசு கண்ணதாசன் இதைத்தானே சொன்னார்!

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்

1809 ம் வருடம் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்து, டாக்டருக்குப் படித்தவர் டார்வின். பிறகு அது பிடிக்காமல், மதகுரு ஆவதற்குப் பயிற்சியெடுத்தவர். அதிலும் ஆர்வம் குறையவே, 'பீகில்' ஆராய்ச்சிக் கப்பலில் உலகம் சுற்றத் தொடங்கிவிட்டார். அபூர்வ தாவரங்கள், அதிசய உயிரினங்கள் என டார்வின் உலகமெங்கும் தேடித் தேடிச் சேகரிப்பதை அவரது பொழுதுபோக்கு என்றே மற்றவர்கள் நினைத்தார்கள். அவரை ஓர் ஆராய்ச்சியாளராக யாருமே கருதவில்லை. அதனால், ஒரு பெரும் உண்மையைக் கண்டுபிடித்தும், மனதில் போட்டு பூட்டிவைத்துப் புழுங்கினார் டார்வின்.

மக்கள் தொகை பெருக்கம் பற்றி தாமஸ் மால்தூஸ் எழுதிய கட்டுரையைத் தற்செயலாக டார்வின் வாசித்தார். அதில் குறிப்பிடப்பட்டிருந்த தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும், தகுதியற்றவை அழிக்கப்பட்டுவிடும்' என்ற வரிகள் அவருக்குள் இருந்த தயக்கத்தை அழுத்தமாகத் தீர்த்து வைத்தது. 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' என தனக்குள் ஆயிரமாயிரம் முறை சொல்லிப் பார்த்தார் டார்வின்.

சர்ச்சை, எதிர்ப்புகளைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்ற முடிவுடன் தனது ஆராய்ச்சியை எழுதத் தொடங்கினார். எழுதி முடிக்க இருபது ஆண்டுகளாயின. 1859 ம் ஆண்டு 'உயிரினங்களின் தோற்றம்' என்ற புத்தகத்தை வெளியிட்டார் டார்வின். உயிர்களை எல்லாம் ஒரே நாளில்தான் ஆண்டவர் உருவாக்கினார் என்று உலகில் எல்லா மதங்களும் போதித்து வந்த கருத்தினை, டார்வினின் புத்தகம் அடித்து நொறுக்கியது. உயிரினங்கள் அனைத்தும் சிறிது சிறிதாக மாற்றமடைந்து, இன்றைய உருவத்திற்கு வந்திருக்கின்றன. மேலும் 'மனித வம்சம்' என்ற தனது அடுத்த ஆராய்ச்சி நூலில் குரங்கில் இருந்து மனிதன் வந்தான் என்று சொன்ன கருத்துக்களுக்கு பெரும் எதிப்பு. அப்போதும் அவருக்குக் கைகொடுத்தது 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' என்ற மந்திரச் சொல்தான்.

அன்று டார்வினை உலகம் ஒப்புக் கொள்ளவில்லை. இன்றோ அறிவியல் உலகத்தில் டார்வின்தான் விஞ்ஞானத் திருவள்ளுவர்.

–மந்திரச் சொல் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

# தெரிந்து கொள்வோம்




## Excellent Tips by Warren Buffet



**On Earnings :** "Never depend on single Income, Make investment to create a second source".

**On Spending :** "If you buy things you do not need, Soon you will have to sell things you need".

**On Savings :** "Do not save what is left after Spending, but spend what is left after saving".

**On Taking risk :** "Never test the depth of River with both feet".

**On Investment :** "Do not put all eggs In one basket.

**On Expectations :** "Honesty is very expensive gift, Do not expect it from cheap people".

Compiled by : Mr. C. Abilash
Facilitation

### வாழையிலையின் மகத்துவம்

1. வாழையிலையில் சாப்பிடுவதால் இளநரை வராமல் நீண்ட நாட்களுக்கு முடி கருமையாக இருக்கும்.

2. தீக்காயம் ஏற்பட்டவர்களை வாழையிலை மீது படுக்க வைப்பதால் சூட்டின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

3. சாப்பாடு வாழை இலையில் கட்டுவதால் நீண்ட நேரத்திற்கு கெடாமலும், மணமாகவும் இருக்கும்.

4. காலையில் குழந்தைகளுக்கு நல்லெண்ணெய் தடவி வாழையிலையில் படுக்க வைப்பதால் சூரிய ஒளியின் விட்டமின் 'டி' யும் வாழையிலையின் குளுமையும் நோய் எதிப்பு சக்தியை அதிகரிக்கும்.

Compiled by : Mrs. M. Shahin
Marketing

### வழிமுறைகள்

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. இக்கரையில் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஓடம் இல்லாமல் எப்படி அக்கரைக்குப் போவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் காளை மாடு ஒன்று அக்கரையைக் கடந்து சென்று கொண்டிருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த இரண்டு பேரில் ஒருவன் ஆற்றுக்குள் குதித்து அந்த காளை மாட்டின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிட்டது. அடுத்தவன் நமக்கு ஒரு 'வால்' கிடைக்காதா என்று எதிர்பார்த்தான். அந்த நேரம் ஒரு நாய் வந்து ஆற்றை கடக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. உடனே இவனும் ஆற்றில் குதித்து அந்த நாயின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். நாயால் இந்த மனிதனையும் இழுத்துக் கொண்டு ஆற்றில் நீந்த முடியவில்லை. திணறியது. ஒரு கட்டத்தில் இருவருமே ஆற்றில் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

இக்கதை நம் லட்சியத்தை அடைய நாம் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளை ஆராய்ந்து செயல்படுவதே நன்று என்பதை உணர்த்துகிறது.

Compiled by : Mr. S. Sivakumar
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XVII)

**பயன்படுவதும் பயன்படாததும்**

அதாவது, 'இது என்றைக்காவது தேவைப்படலாம்!' என்று நம்புவதில் தப்பே இல்லை. ஆனால், இன்றைக்குப் பயன்படுகிற பொருள்களையும், அதையும் சேர்த்துவைத்துக் குழப்புவதுதான் ஆபத்து. இவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

மலையேற்றத்தில் ஆர்வமுள்ளவர்கள், புதிய சிகரங்களின் மீது ஏறக் கிளம்பும்போது, தங்களுடைய "Back Bags" எனப்படும் முதுகுப் பைகளை மிகவும் கவனமாக எடை போடுவார்கள்.

தண்ணீர், சாப்பாடு, மருந்துகள் போன்ற சில அத்தியாவசியப் பொருள்களைத்தவிர, மற்ற விஷயங்கள் ஒவ்வொன்றையும் கையில் எடுத்துக் கொண்டு, 'இது நிஜமாகவே தேவைதானா?' என்று அவர்கள் யோசிக்க வேண்டும், முடிந்தவரை முதுகுப் பையின் கனத்தைக் குறைக்க வேண்டும்.

காரணம், மலையேற்றம் என்பது சாதாரண விஷயமில்லை. மிகவும் உடல் உழைப்பைக் கேட்கிற கடுமையான அந்தப் பயிற்சியின் போது, அநாவசியமாக முதுகில் பாரம் சேர்ந்தால், ஏறுகிற வேகம் தானாகக் குறையும், களைப்பு அதிகரிக்கும்.

இதனால்தான், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மிகவும் அவசியமான பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டால் போதும், மற்றவை அவசியமில்லை என்று ஒரு கட்டாயமான விதிமுறை பின்பற்றப்படுகிறது.

இதேபோல், நீண்டகாலப் பயணமாக அமெரிக்கா அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்கிறவர்கள், தங்களுடைய பெட்டி படுக்கைகளைப் பார்த்துப் பார்த்துதான் மூட்டை கட்டுவார்கள்.

## கவிதைகள்

### மனித நல்லொழுக்கத்திற்கு எதிரான பண்புகள்

1. உழைப்பு இல்லாத செல்வம்
2. மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி
3. குணம் இல்லாத அறிவு
4. நெறிமுறை இல்லாத வணிகம்
5. மனிதத்தன்மை இல்லாத பக்தி
6. கொள்கை இல்லாத அரசியல்

Collected by : Mrs. M. Sudha
Hydro-Gen

### அறநெறி

நல்லவனாய் இரு.
ஆனால் அதை நிரூபிக்க
முயற்சி செய்யாதே.
அதைவிட முட்டாள்தனமான
விஷயம் ஏதுமில்லை.

Compiled by : Mr. M. Kumar
Design

### Me

I'm perfect in my
Imperfections,
Happy in my pain,
Strong in my
Weaknesses and
Beautiful in my
Own way because
I'm me.



Compiled by : Mr. D. S. Anish
System Admin

## சிந்தைனைக்கு

- உங்களது திறமையையும், அனுபவத்தையும் பயன்படுத்தி எப்போதும் சிறப்பாக செயல்படுவீர்கள் என்றால், வருத்தங்கள் அற்ற வாழ்க்கை உங்களுக்கு கிடைக்கும்.
- <u>உத்வேகம் அளிக்கும் மந்திரம்</u>

  மெதுவாக பேசு அது உன் ரகசியங்களை
  பாதுகாக்கும், நல்ல எண்ணத்தோடு இரு
  அது உன் நடத்தையை பாதுகாக்கும்.

Compiled by : Mr. K. Manivannan
Fibtec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

காரணம், ஒருவருக்கு இத்தனை கிலோ என்று விமான நிறுவனங்கள் வரம்பு வைத்திருக்கின்றன. அதற்குமேல் பொருள்களைக் கொண்டு வந்தால், 'கிலோ'வுக்கு இத்தனை டாலர் என்று காசை எண்ணிக் கையில் வைக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வரம்புக்குமேல், இதையும் அனுமதிக்கமாட்டார்கள். வெயிட்டைக் குறைச்சாகணும் என்று தயவு தாட்சண்யமில்லாமல் சொல்லிவிடுவார்கள்.

இப்படியில்லாமல், யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் கொண்டுவரலாம் என்று அவர்கள் அறிவிப்பதாக வைத்துக் கொள்வோம். நம்மவர்கள் பழைய பாத்திரம், குமுட்டி அடுப்பில் தொடங்கி, ஒரு மினி கிராமத்தையே அமெரிக்காவுக்கு நாடு கடத்திவிட மாட்டார்களா?

மலையேற்றம், விமானப் பயணம் என்று வருகிறபோது மட்டும், வேறு வழியில்லாமல் அவசியமான பொருள்கள், அவசியமற்ற பொருள்கள் என்று உட்கார்ந்து தரம் பிரிக்கிறோமே, இந்தப் பழக்கத்தைத் தினசரி வாழ்க்கையிலும் பின்பற்றினால் என்ன?

உதாரணமாக, பெரும்பாலான வீடுகளின் முன்பகுதியில், செருப்புகள், ஷூக்களைப் போட்டுவைப்பதற்காக ஓர் அட்டைப் பெட்டி அல்லது மர டப்பா இருக்கும். இந்த டப்பாவினுள் என்னவெல்லாம் கிடக்கிறது என்று எப்போதாவது ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்களா?

மேலோட்டமாகப் பார்வையிடும் போது, வீட்டில் இருக்கிற நான்கைந்து பேரின் காலணிகள் மட்டும்தான் தென்படும். ஆனால், அவற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், சில பழைய செருப்புகள் பல்லிளிக்கும்.

இவை எல்லாமே நம்முடைய பழைய செருப்புகள்தான். இந்த செருப்புகள் பிய்ந்துவிட்டன அல்லது தேய்ந்துவிட்டன என்பதற்காகத்தான், புதுச் செருப்புகளை வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

ஆனாலும், உபயோகமில்லாத அந்தப் பழைய செருப்புகளை வீசி எறிய நமக்கு மனம் வருவதில்லை. அவற்றை அப்படியே பெட்டியின் அடியில் தூசு படியப் போட்டுவைத்திருக்கிறோம்.

தொடரும்…

